செ.வெ.எண்: 15 நாள்:07.09.2016

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.91.72 கோடி செலவினத்தில் 22 மாவட்டங்களில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.3.4922கோடி செலவினத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

**புதிய தோட்டங்கள் அமைத்தல்**

தோட்டக்கலை பயிர்களில் வீரிய ஒட்டு இரக காய்கறிகள், மிளகாய், மா, கொய்யா, திசுவாழை, முந்திரி, மல்லிகை, சாமந்தி, மிளகு ஆகியவற்றில் புதிய தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ.87.91இலட்சம் செலவில் 520 எக்டர் பரப்பிற்கு 40 சதம் மானியமும், பப்பாளி, எலுமிச்சை போன்ற பயிர்களுக்கு 50 சதம் மானியமும் வழங்கப்படுகிறது.

**பாதுகாக்கப்பட்ட சாகுபடி**

பசுமைக்குடில்கள், நிழல்வலைகுடில்கள், பறவை தடுப்பு வலை மற்றும் நிலப்போர்வை போன்ற உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்திற்கு ரூ.63.325 இலட்சம் செலவினத்தில் பசுமைக்குடில்கள் மற்றும் நிழல்வலைகுடில்கள் 14000 சதுர மிட்டர் பரப்பிலும், நிலப்போர்வை 50 எக்டர் பரப்பிலும் 50 சதம் மானியத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பண்ணை இயந்திர மயமாக்கல்**

பண்ணை இயந்திரங்களான மினி டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் தெளிப்பான்கள் 25 சத மானியம் முதல் 50 சத மானியம் வரை அனுமதிக்கப்ட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ.3.875 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறுவடை பின் செய் நேர்த்தி**

அறுவடைக்கு பிந்தைய மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள 50 சதம் மானியத்தில் சிப்பம் கட்டும் அறை, குறைந்த செலவின வெங்காய சேமிப்பு கிடங்கு போன்றவை செயல்படுத்தப்பட உள்ளன.

**சந்தை உள்கட்டமைப்பு**

தோட்டக்கலை பயிர்களுக்கான சந்தை உள்கட்டமைப்ப வசதிகள் மேம்படுத்த மானியத்துடன் கூடிய ஊரக சந்தை, சில்லறை விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனை நிலையம் அமைக்க விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தி குழுக்கள் வரவேற்கப்படுகின்றனர். இதற்காக ரூ.12.750 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இதரவகை**

இவ்வாண்டின் சிறப்பு திட்டமாக விவசாயிகள் தங்கள் தோட்டக்கலை பண்ணை பணிகளை தொய்வின்றி உரிய பருவத்தில் மேற்கொள்வதற்கு ஏதுவாக பண்ணை சாகுபடிக்கு தேவையான பொருட்கள் 50 சதம் மானியத்தில் விவசாயிக்கு ரூ.2000/-க்கு மிகாமல் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1250 விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ரூ.20.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 40 சதம் மானியத்தில் தேனீ வளர்ப்பு, 50 சதம் மானியத்தில் பழைய தோட்டங்கள் புணரமைத்தல், மண்புழு உர உற்பத்தி மற்றும் மண்புழு உர படுக்கை அமைப்பதற்கு ரூ.23.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களுக்காக 30 சதம் மானியத்தில் எக்டருக்கு ரூ.500/-க்கு மிகாமல் நுண்ணூட்ட கலவை விநியோகம் செய்ய ரூ.25000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கிய இந்த பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி விவசாயிகள் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தங்களது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் தகவலுக்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநரை தொடர்பு கொள்ளவும். **தொலைபேசி எண்** : 04322 - 228394

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**